**O.S.149 of 2021**

Date : 12.06.2025

வா.சா.1 : மல்லிகா

<u>வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்</u>

நான் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் வேலை எதும் பார்க்கவில்லை . என் கணவர் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார். அவர் பாளையங்கோட்டையில் இருக்கிறார். எங்களுக்கு குழந்தைகள் இல்லை. பிராதில் செல்லையாண்டி என்ற ராபர்ட் என்பவர் தனது ஆட்களுடன் வந்து என்னிடம் அடிக்கடி பிரச்சனை செய்வார்கள் என்றும் நான் அது குறித்து பிரதிவாதியிடம் புகார் கொடுக்க செல்லும் போது அவரும் தலைமை எழுத்தர் மேரி ஸ்டெல்லா பாயுடன் சேர்ந்து எனது புகாரை வாங்க மறுத்ததுடன் என்னை சிறையில் அடைத்துவிடுவேன் என்று மிரட்டினார்கள் என்று சொல்லியுள்ளேன் என்பதில் அந்த சம்பவம் எந்த தேதியில் நடைபெற்றது என்றால் 02.06.2020 கொரனா சமயத்தில் நடந்தது. நான் புகார் கொடுத்ததாக சொல்வதில் அதன் கை நகல் என்னிடம் உள்ளது. அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி நடந்து கொண்டது சம்மந்தமாக அவர் மீது உயர்அதிகாரிகளான காவல் ஆய்வாளர், துணை கண்காணிப்பாளர் மற்றும் மாவட்ட கண்காணிப்பாளர் ஆகியோர்களிடம் புகார் கொடுத்தேனா என்றால் SP அலுவலகத்தில் கொடுத்தேன். அதன் கை நகல் உள்ளே கொடுத்திருப்பேன். எந்த தேதியில் கொடுத்தேன் என்றால் 8 அல்லது 9 ம் தேதி கொடுத்திருப்பேன். அந்த மனு மீது ஏதேனும் விசாரணை நடைபெற்றதா என்றால் விசாரணை நடைபெறவில்லை. பிரதிவாதியிடம் எத்தனை முறை புகார் கொடுக்க சென்றுள்ளேன் என்றால் 2, 3 முறை கொடுக்க சென்றேன். அவர் எந்த புகாரையும் வாங்கிவில்லை. எனவே காவல் ஆய்வாளரிடம் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. என்னை காவல் நிலையத்தில் மாலை 5.30 மணி வரை வைத்திருந்தார்கள் என்று பிராதில கூறியிருப்பது என்றைய தினம் என்றால் 02.06.2020 ஆகும். மனித உரிமை மீறல் என்று நான்சொல்லியிருப்பதில் புகார் ஏதும் கொடுத்துள்ளேனா என்றால் எல்லா பக்கமும் கொடுத்துள்ளேன். அது சம்மந்தமாக மனு ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 02.06.2020 ம்தேதிக்கு முன்பு நான் ஏதேனும் புகார் கொடுத்துள்ளேனா என்றால் கொண்டு போனேன் ஆனால் அவர்கள்

வாங்கவில்லை. அந்த புகார் மனுக்கள் என் வீட்டில் உள்ளது. என் மீது 02.06.2020 ம் தேதி பொன் செல்வி என்பவர் முதல் நிலை காவலர் ஸ்டெல்லா பாய் என்பவரிடம் புகார் கொடுத்ததன் பேரில் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றாலும் அந்த முதல் தகவல் அறிக்கைதான் வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கு பொய் வழக்கு ஆகும். புகார் மனுவில் சம்பவம் உண்மையென்பதால்தான் என்னை கைது செய்தார்கள் என்றால் சரியல்ல. அந்த புகாரின் பேரில் என்னை கைது செய்தது உண்மையென்பதால்தான் நீதிமன்றம் என்னை காவலில் வைத்தது என்றால் சரியல்ல. அது பொய் வழக்கு ஆகும். மூலைக்கரைப்பட்டி காவல் நிலையத்தில் பிரதிவாதிதான் ஒரே காவல் உதவி ஆய்வாளர் என்றால் அவர்தான் மெயின் ஆள். பிரதிவாதி மூலைக்கரைப்பட்டி காவல் நிலையத்தில் பொறுப்பு அதிகாரியாக இருந்ததால் என் மீது பதியப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் மீது மேல் விசாரணை செய்து என் மீது நடவடிக்கை எடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த முதல் நிலை காவலர் மேரி ஸ்டெல்லா பாய் மீதும் ரூ.2 லட்சம் இழப்பீடு கேட்டு OS 150/2021 என்ற வழக்கு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கினை நான் நடத்தாமல் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. விசாரணையில் உள்ளது. என் மீது இந்த வழக்கு போக மூலைக்கரைப்பட்டி காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை எண்.22/2008, 30/2011 இந்த வழக்குகள் இருக்கிறது என்றால் சரிதான். அது பொய் வழக்கு ஆகும். 2008 ல் வேறு உதவி ஆய்வாளர் இருந்தார். இந்த பிரதிவாதி இல்லை. என் மீது பிரதிவாதியால் பதியப்பட்ட வழக்கு CC என எண்ணிடப்பட்டு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எனக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டது என்றால் எனக்கு இன்னும் வரவில்லை. எனக்கும் பிரதிவாதிக்கும் தனிப்பட்ட விரோதம் ஏதும் இல்லை. ராபர்ட் செல்லையாவின் தூண்டுதலின் பேரில்தான் பிரதிவாதி செயல்பட்டார். ராபர்ட் செல்லையாவின் மீது நஷ்டஈடு வழக்கு போட்டுள்ளேனா என்றால் இல்லை. அசல் வழக்கு 72/2020 எனக்க சாதகமாக தீர்ப்பாக உள்ளது என்று கூறியுள்ளேன். அந்த வழக்கு முடிந்துவிட்டது. எனக்கு சாதகமாக முடிந்திருந்தால் அந்த தீர்ப்பை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நீ சிறைக்கு சென்று வந்தவளா என்று கேட்டார்கள் என்று நான் பிராதில் கூறியுள்ளதில் யார் கேட்டார்கள் என்றால் பொன்செல்வி, ஆட்டோ பெருமாள், ஆண்டாள் மற்றும் ரோட்டில் உள்ளவர்களும் கேட்டார்கள். நான் பிராதில் உண்மைக்கு மாறாக

சங்கதிகளை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. உச்ச நீதிமன்ற நடைமுறைகளை பின்பற்றிதான் என் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதி காவல் நிலைய பொறுப்பு அதிகாரி என்பதால் சட்டப்படியான செய்கையைதான் செய்துள்ளார் என்றும் நான் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.